# 4 கல்யாணமாம் கல்யாணம்!

3M5MCG

பூனைக்கும் பூனைக்கும் கல்யாணமாம்
பூலோகமெல்லாம் கொண்டாட்டமாம்
யானை மேலே ஊர்கோலமாம்
ஒட்டகச்சிவிங்கி நாட்டியமாம்
கொர்கொர் குரங்கு பின்பாட்டாம்
தடபுடலான சாப்பாடாம்





தாலிகட்டும் வேளையிலே
மாப்பிள்ளை பூனையக் காணோமாம்
சந்தடி புந்தடி செய்யாமல்
சமையல்கட்டில் நுழைந்தாராம்
வாங்கிவச்சப் பாலையெல்லாம்
ஒரே மூச்சில் குடித்தாராம்



பார்த்துவிட்ட பெண்ணின் தாயும்
பலத்த சத்தம் போட்டாராம்
திருட்டு மாப்பிள்ளைக்கு என் பெண்ணைத்
திருமணம் செய்ய முடியாது
வேண்டா இந்த சம்பந்தம்
வெட்கக்கேடு போய் வாறோம்

– நாட்டுப்புறப் பாடல்



## வாங்க பேசலாம்

- இப்பாடலை ஓசை நயத்துடன் பாடி மகிழ்க.
- உனது பகுதியில் வழங்கும் உனக்குப் பிடித்த நாட்டுப்புறப் பாடல்களை அறிந்து வகுப்பறையில் பாடுக.

## படிப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

**பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக.**



கல்யாணமாம் ____________

____________ ____________

____________ ____________

## சரியான விடையைத் தெரிவு செய்வோமா?

1. பூலோகமெல்லாம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ....................................
   (அ) பூலோக + மெல்லாம் (ஆ) பூலோகம் + மெல்லாம்
   (இ) பூலோகம் + எல்லாம் (ஈ) பூலோக + எல்லாம்

2. கல்யாணத்தில் நாட்டியமாடுபவர் ....................................
   (அ) பூனை (ஆ) ஒட்டகச்சிவிங்கி
   (இ) யானை (ஈ) குரங்கு

3. பாலை + எல்லாம் இதனை சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் ........................
   (அ) பாலையெல்லாம் (ஆ) பாலைஎல்லாம்
   (இ) பாலைல்லாம் (ஈ) பாலெல்லாம்

## இணைந்து செய்வோம்

கோப்பைகளை அவற்றின் சரியான தட்டுகளோடு பொருத்துக:

| | | |
|---|---|---|
| காணோமாம் | ____________ | வருகிறோம் |
| வாங்கி வச்ச | ____________ | பூனையை |
| வாறோம் | ____________ | வாங்கிவைத்த |
| பூனைய | ____________ | காணவில்லையாம் |

**சிந்திக்கலாமா?**




இப்பாடலில் வரும் பூனைக்கும் பூனைக்கும் பதிலாக யானைக்கும் பூனைக்கும் கல்யாணம் ஏற்பாடு செய்திருந்தால் எவ்வாறு இருக்கும்?

வகுப்பறையில் பேசுக...



# கலையும் கைவண்ணமும்

## வண்ணமிட்டு மகிழ்க





### செயல் திட்டம்

உமது பகுதியில் வழங்கும் நாட்டுப்புறக் கதைகள் இரண்டினை அறிந்து வருக.